ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

# ஆர்ய தர்மம்.

வருஷம் வருஷமாகக் காலம் புரண்டுகொண்டு வருகையிலும் வஸந்தம் கிரீஷ்மம், முதலிய ருதுகாலங்களில் அந்தந்த ருதுக்களின் அடையாளங்கள் தோன்றிக்கொண்டே வருவதுபோல் மஹா யுகமெனப்படும் மஹா காலசக்கிரம் சுழன்றுவருவதில் யுகசரணங்களெனப்படும் கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்ற காலப்பிறிவினையில் அந்தந்த யுகங்களின் அடையாளங்கள் தோன்றிவருவது எல்லோருக்கும் தெரிந்ததே. அதில் பிராணிகள் இயற்கையாகவே குளிர்காலத்தில் கம்பளி முதலியவைகளால் போத்திக்கொண்டு காற்று வாடையில்லாத கட்டிடங்களினுள்ளே இருப்பதுபோலும், கோடைகாலம் வந்துவிட்டால் கட்டிடத்திந்து வெளியே விசாலமானவிடத்தில் நல்லகாற்று வீசும்படியான இடத்தில் இருப்பதுபோலும், கிருதாதியுகங்களில் சுவபாவமாகவே பிராணிகள் தவம், யாகம், முதலியவைகளில் தடையில்லாமல் பஹிரங்கமாகவே பிரவிருத்தித்துவந்தார்கள். கலிகாலமென்னும் பனிகாலம் தர்மகார்யங்களை நடத்த இடையூறாக இருப்பதுபற்றி, நாஸ்திக்கியம், அசிரத்தை (அவநம்பிக்கை) சோம்பல், இவைபோன்ற துர்க்குணங்களைக் கம்பளி போலப் போத்திக்கொண்டு பஹிரங்கமாகத்தர்மம் நடக்குமிடத்திற்கே வருவதற்கு அஞ்சி, பெரும்பாலும் அதர்மத்தையே நடத்திவருகிறார்கள். சிறு குழந்தைகள் போர்வை யில்லாமலே குளிர்காலத்திலும் வெளிவருவதைக்கண்ட தாய்தந்தைகள் அக்குழந்தைகளை இழுத்துப்பிடித்து போர்வையைப் போட்டு வருவதுபோலவே, அதர்மப்பிரவிருத்தியுள்ள சில சோம்போரிகள் சுவபாவமாகவே தர்ம கார்யங்களில் தடையின்றிப் பிரவிருத்திக்கும் தன்மைவாய்ந்த நம் ஆர்யச் சிறுவர்களை இழுத்துப் பிடித்து பலாத்காரமாக நாஸ்திக்கியம்முதலியபோர்வையைப்போற்றி உள்ளேஉட்கார்த்தி வைத்து விடுகிறார்கள். அதனால் தர்மத்தில் சுயமாகவே முயலும் நம் ஆர்யச்சிறுவர்கள் ஒன்றும் செய்யத்துணியாமல் மயங்குகிறார்கள். சில குழந்தைகள் தாய்தந்தைகளின் தர்மமொழியைத் தடுத்துப் பேசுகிறார்கள். அந்த நாஸ்திக்கியப்போர்வையைப் போத்திக்கொண்டவர்கள், ஸத்தியமே சொல்லவேண்டும்— ஹிம்ஸை செய்யக்கூடாது— என்பதாதியான வெல்லம் தடவிய சில இனிப்பானமொழிகளைப்பேசிச்சிறுவர்களைக் கலைத்துத்தனித்துக்கொண்டுபோய் அஸத்தியத்தில் அமிழ்த்திவிடுவதையும் ஹிம்ஸையில் நுழைத்து விடுவதையும் நம் சிறுவர்கள் தெரிந்து கொள்ளுவதில்லை. தெரிந்துகொள்ளும்படியாகத் தன்னினத்தார் சொல்லுவதைக் கேட்பதுமில்லை. அதனால் எங்குகண்டாலும் அந்தக் கூட்டமே வலுத்துப்போய் தார்மிகர்களைத் தலையெடுக்க முடியாமற் செய்துவிடும்போலிருக்கிறது. ஆயினும் அதற்கெல்லாம் அஞ்சாத தர்மவீரர்களையும் பாரதமாதா பெற்றிருக்கிறார்கள். அவர்களையே பின்பற்றி யாவரும் சுகமாயிருப்பார்களாக.

-சுபம்

பத்திராதிபர்.

உ

# ஆர்யதர்மம்.

பிரமோத-ஹூ மார்கழிமீ உ௪உ

## அகிலபாரதிய வர்ணாசிரம தர்மஸ்வாராஜ்யசங்கம்.

இவ்வருஷத்திய இந்தசங்கம் பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த ஜலக்கிராம மெனப்படும், ஜல்காம் என்ற ஊரில் கூடிற்று. 1930 ஹூ டிஸம்பர் மீ 29உ 30உ 31உ இந்த மூன்றுதினங்களில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட ஷை சங்கம் 1931-ஹூ ஜனவரி-மீ 1உயிலும் சில கார்யசேஷத்தை யொட்டி வைத்துக்கொள்ளப்பட்டது. இதற்கு ஸந்தோஜிமஹாராஜ் வரவேற்புக்கமிட்டித்தலைவராகவும் நாதத்துவாரம் ஸ்ரீமத் வல்லபாசார்யஸ்வாமிஜீயின் பிரதானபீடத்திலிருக்கும் கோஸ்வாமி திலகஸ்வாமிஜீ அவர்களது புத்திரஇரத்தினமானவித்தியாஸாகர ஸ்ரீமத் தாமோதா லால்ஜீ அவர்கள் ஸபாத்தியக்ஷராகவும் குறிப்பிடப்பட்டார்கள். ஸ்ரீமான் தர்மப்பிராணன் திராவிட லக்ஷ்மண சாஸ்திரிகளவர்களது பெருமுயற்சியால் அவர்களது வேண்டுகோளுக்கிணங்கி அனேக மடாதிபதிகளும் பிரதிநிதிகளும் பல பண்டிதர்களும் பல ப்ரமுகர்களும் ஷை சங்கத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள். அதில் சங்கேசுவரமடாதிபதிகளான ஸ்ரீஜகத்குரு சங்கராசாரியஸ்வாமிகள் அவர்களும், யதுகிரிமடாதிபதி ஸ்ரீஸ்வாமிகள் அவர்களும், பிரதிவாதிபயங்கரம் அனந்தாசார்ய ஸ்வாமி அவர்களும், வல்லபாசார்ய ஸ்ரீமத் தாமோதா லால்ஜீ அவர்களும், ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய ஸ்ரீமடம் ஸமஸ்தான ப்ரதிநிதிகளான 10-பண்டிதர்களும் மற்றும் மஹாராஷ்டிரதேசம் கூர்ஜாதேசம் முதலியவிடங்களிலிருந்து அனேக பண்டிதர்களும் கனவான்களும் விஜயம்செய்திருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் தனித்தனியே வாஸஸ்தானம் முதலியன நன்றாக ஏற்படுத்தப்பட்டிருந்தன. வந்தவர்களையெல்லாம்ஸந்தோஜிமஹாராஜாவர்களும்

ஸ்ரீமான் தர்மப்ராண த்ராவிட லக்ஷ்மணசாஸ்திரிகள் அவர்களும் ஜல்காம் ரயில்வேஸ்டேஷனிலேயே பேட்டிகண்டுவரவேற்றிஉசித மான வாஹனங்களில் விடுதியில் கொண்டுவிட்டார்கள். 28-12-30 காலேமுதல் புருஷஸூக்த விதானமாக அனேக ரித்விக்குகளால் விஷ்ணுயாகம் ஆரம்பிக்கப்பட்டு பிரதிதினமும் விதிப்படி நடத்தப் பட்டு பூர்ணாஹூதிபர்யந்தமான ஸகலகார்யங்களும் லோக க்ஷேமத்திற்காகவே சிரத்தையாக நடத்தப்பட்டது.

சங்கத்திற்காகவந்த ஸகல ஜனங்களும் ஷை யக்ஞத்தைத் தினந்தோறும் ஸேவித்தார்கள். 29—12—10வ சங்கத்திற்காக வென்றே விசித்திரமாக அமைக்கப்பட்டிருந்த விசாலமானகொட் டகையில் ஆசார்யஸ்தானமாக அமைக்கப்பட்ட உன்னதமான மேடையில் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆசார்யாள் எல்லோரும் உசி தம்போல் அவரவர்களது பீடத்தில் ஸகல ஸன்னாஹங்களுடன் விஜயம் செய்தார்கள். பிரதிநிதி பண்டிதர்களும் அவர்களுக் கென்று அமைக்கப்பட்ட விடத்திலமர்ந்தார்கள். பலதேசத்துப் பிரமுகர்களும் ஷை சங்கத்தில்வந்து கலந்துகொண்டார்கள். ஆசார்ய வர்க்கங்களும், ஸபையோர்களும் விஜயம்செய்திருந்த அந்த ஸமயம் பார்த்தவர்கள் ஸநாதனதர்மமே உருவெடுத்து வந்ததுபோல் நினைக்கும்படி இருந்தது. (1) முதலில் ஸம்ஸ்கிரு தத்திலும்,ஹிந்தியிலும்,மாராட்டியிலும் தோத்திரபாடங்கள் சொல் பட்டன (2)பிறகுஸந்தோஜீ மஹாராஜ் அவர்கள் எல்லோர்களையும் உசிதம்போல் வரவேற்றி நீண்டதோர் உபந்யாஸம் செய்தார்கள். (3) பிறகு விஜயம் செய்திருந்த ஆசார்யவர்க்கங்களுக்கு வரவேற் புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. சுலோக ரூபமாகவும் கானரூபமாகவும் வரவேற்புக் கூறப்பட்டது. புஷ்பஹாராதிகளால் ஆசார்ய வர்க்கங்களுக்கு பூஜைசெய்யப்பட்டது. (4) பிறகு ஆசார்யாள் ஆசிர்வாத பூர்வமாக தர்மோபதேசத்தைச் சுருக்க மாகச் சொன்னார்கள். (5) பிறகு ஸபாத்யக்ஷராக ஸ்ரீமத் தாமோதரலால்ஜீஅவர்கள்தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்தவிஷ யத்தை கிரிதாசர்மா அவர்கள் பிரஸ்தாவம் செய்தார்கள். மஹாமஹோபாத்தியாய ஸ்ரீமான் அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் ஆமோதனம் செய்தார்கள். பிறகு ஒருவரால் ஸமர்த்த னம்செய்யப்பட்டுஸபையோர்களால் ஏகமனதாய் அங்கீகரிக்கப் பட்டது.கார்யநிர்வாஹமந்திரியால்ரிபோர்ட்டுபடிக்கப்பட்டது(6)

பிறகுஸப்ரத்யக்ஷரான ஸ்ரீவல்லபாச்சார்யஸ்வாமி ஸ்ரீமத் தாமோதரலால்ஜீ அவர்கள் தனது அக்கிராஸனப் பிரஸங்கத்தை ஸம்ஸ்கிருதபாஷையில் அழகாய் உபந்யஸித்தார்கள். (இதன் ஸாரம் அடுத்த ஸஞ்சிகையில்) (7) இரவு 8-மணிக்கு ' விஷயாலோசனைக் கமிட்டி நடத்தப்பட்டதோடு முதல்நாள் நடவடிக்கை முடிந்தது.

சுபம்.

பத்திராதிபர்.

---

# ஸ்ரீ மீனாக்ஷி பரிணயம்.

## ஆறுவது தரங்கம்.

(637-வது வது பக்கத்தொடர்ச்சி.)

'உனது ஜயயாத்திரை, உடனே விவாஹத்துக்குக் காரணமாகும் என்று அகத்தியர் சொன்னதை மறக்காதே' என்று சுமதியால் அறிவிக்கப்பட்ட அம்மீனாக்ஷிதேவி, வெட்கத்துடன் புன்னகைசெய்து, அப்போதே மதுரையை நோக்கிப் பயணப்பட்டாள். பிறகு தனது கடாக்ஷத்தால் சுகமாக தூங்கி எழுந்ததுபோல் எழுந்த அச்சேனையை அநுக்கிரஹித்தவளான அவ்வம்மை, பூமார்க்கத்தைவிட்டுத் தோழிகளுடன் புஷ்பக விமானம் ஏறிக்கொண்டு ஆகாயமார்க்கமாய்க் கிளம்பினாள். ராஜகுமாரி வழியில் போகும்போது, உயரமான மலைகளைப்புற்றுகள்போலவும், பெருங்காடுகளை புல்மண்டின பிரதேசங்கள் போலவும், கங்கை முதலான நதிகளை நூற்கள் போலவும், தூரமாயிருப்பதால் கண்டாள். அவள் சுமதியால் அறிவிக்கப்பட்ட சுபமுகூர்த்தத்தில் பட்டணத்திற்கு அருகாமையிலுள்ள பூந்தோட்டத்தில் இறங்கி, அலங்கரிக்கப்பட்ட அரண்மனையில் மெதுவாகப் பிரவேசித்தாள்.

பிரவேசித்து சபாமண்டபத்தில் கணநேரம்தங்கி, பட்டணத்து ஜனங்களையும், பின் தொடர்ந்தவர்களையும் விட்டுவிட்டு, தாயாரின் வீடுசேர்ந்து, ஆனந்தக்கண்ணீரால் மறைக்கப்பட்ட கண்ணோடுகூடின அவளை வணங்கினாள். காஞ்சனமாலை, வணங்கினபெண்ணைக்கெட்டியாகத்தழுவி, உச்சியில் முகர்ந்து, அகத்தில் முத்தமிட்டாள். பிறகு அவள் சுமதியால் அறிவிக்கப்பட்டதும், தெய்வலோகத்திலிருந்துவந்ததும் மானிடலோகத்திலிருந்துவந்த

துமான காணிக்கையைக் காண்பித்தாள். பூஜிக்கப்பெற்ற கற்பகத்தருக்களையும், காமதேனுவையும் வணங்கி, அவள் ஏற்றுக்கொண்டாள். தோழிமார்களும் சுமதியும் சேர்ந்து, காஞ்சனமாலையிடம், தேவர்களுக்கும் உலகங்களுக்கும் எவர் வரரோ (ஸ்ரேஷ்டரோ) அதே வரன் தானாகவே செல்வக் குமாரியால் சம்பாதிக்கப்பட்டார் என்று பிரியத்தைத் தெரியப்படுத்தினர்.

பிறகு சுமதி, அவளுடைய உத்திரவால் கல்யாண சம்பாரத்தைச் சேகரிக்கப் புறப்பட்டான். அப்போது தாயார், சமீபித்த விவாஹ மங்களத்தையுடைய பெண்ணுக்குத்தானே பிராம்பரமுடித்தி இரத்தினாபரணங்களை இட்டு, ஆரார்த்தி மங்களஞ்செய்து, நெற்றியில் தவளமான திருநீரால் ரக்ஷை செய்தாள். பிறகு சுமதி அங்கு தேவர்களுக்கும் வேந்தர்களுக்கும் முனிவர்களுக்கும் கணநேரத்தில் விடுதிகளை யேற்படுத்தினான். வாஸனா திரவியங்களால் பூசப்பட்ட சுவர்களுள்ளதும், வீடுதோறும் தங்கவாழைகள் கட்டப்பெற்றதும், உயரத்தூக்கப்பட்ட கொடிகளையுடையதும், கொடைகள் தூக்கப்பட்டு ரமணீயமுமான மதுரைமாநகரம், தானாகவே பட்டணத்து ஜனங்களால் மேன்மேலும் அலங்கரிக்கப்பட்டது.

பிறகு பரமேசுவரன் சுந்தரநாதலிங்கத்திலிருந்து வெளிக்கிளம்பி, மானிடசரீரமெடுத்துக்கொண்டு, பிரமதகணங்களாலும் வானவர்களாலும் மாதிரு கணங்களாலும் சூழப்பட்டவராய், மதுரையின் உபவனத்துக்கருகில் இறங்கினர். பிறகு முகூர்த்தம் நெருங்கிவிட்டதைத் தெரிந்து, விவாஹத்திற்குரிய வேஷத்தால் ஸுந்தராரான அந்த ஸுந்தரேசர் மதுரையில் பிரவேசிக்க வெளிக்கிளம்பினர். மிகப்பரிசுத்தமான முத்துகளாலமைக்கப்பட்ட குண்டலமுள்ளதும், புன்சிரிப்பால் அழகிய உதடுள்ளதும் விசாலமான கண்களுள்ளதுமான இவருடைய முகத்தைப் பார்க்க அதே மீனாக்ஷி தகுதியுள்ளவளாகிறாள். இந்திரன் அலங்கரித்துக்கொண்ட சுந்தரேசருக்கு, விசாலமும் நிர்மலமுமான கண்ணாடியைப்பிடித்தான், பிறகு நந்தியால் சரணாரவிந்தங்களில் வைக்கப்பட்ட இரத்தின பாதுகைகளைப் பரிசுத்தம் செய்கின்ற புராரி பிரும்மவிஷ்ணுக்களின் கைகளைப் பிடித்துக்கொண்டு, மெள்ள மெள்ள வெளிக்கிளம்பினர். அச்சிவபெருமானின் விடபம், கஜமுகனிடமிருந்து அக்காலத்தில் கற்றுக்கொள்ளப்பட்ட

மதத்தால் மந்தமானகமனத்தாலும் கண்களைக் கொட்டுவதா லும் துதிக்கையை சுருட்டிக்கொண்டு காதுகளை ஆட்டுவதா லும் கஜராஜனுக மாறிற்று. நடைகளின் விநோதங்களால், அதன் முன்னங்கால்களில் கணநேரம் கால்வைத்துக் காதைப் பிடித்து, அச்சிவபெருமான் அதை விளையாட்டுடன் நிமிர்த்தி, உதயமலையில் சூரியன் ஏறுவதுபோல் ஏறினர். அப்போது பிரமனும் விஷ்ணுவும் அடிக்கடி இழுத்து அடக்கப்படுகிற யானை களைச் சமமாகச் செலுத்திக்கொண்டு அவரது இருபக்கங்களி லும் சென்றனர். நந்திதேவர், இந்திரனேடுகூடி ஓரிடத்தில் மஹாகாலன் முதலான கணநாதர்களையும், ஓரிடத்தில் தேவர்கள் சித்தர்கள் சாரணர்கள் இவர்களையும், தூரத்திலேயே அடக்கிக் கொண்டு பக்கங்களில் முன்புறமாகச்சென்றார்.

மறைகளும் சிவாகமங்களும் வந்திகளாயிருந்து கொண்டு, யோகிகளோடு சேர்ந்து அவரை வணங்கின. இந்திராணிமுதலான தேவஸ்திரீகளோடும் மாதிருகணங்களோடும் கூட தேரின்நடுவில் உட்கார்ந்த லக்ஷ்மிதேவியும் ஸரஸ்வதி தேவியும் அவரைப் பின் தொடர்ந்தனர். அவரது தலையில் பிடிக்கப்பட்ட வெண்குடை விளங்கிற்று. உயரத்தில் தூக்கப்பட்ட இரண்டு சாமரங்கள் காணப்பட்டன. சிவபெருமானிடம் தனது பராக்கிரமத்தை வெளிப்படுத்த விரும்பின மன்மதனுல் சேகரிக்கப்பட்டு சொந்த மான மூலபலம்போல் உள்ள ஸ்திரீக்கூட்டம், அவரைப் பார்க்க எங்கும் கிளம்பிற்று. ஒரு முகம், இரு கைகள், இரண்டு நேத்தி ரங்கள் இவைகளோடு கூடினவராயினும், காந்தியால்மானிடருக்கு ஏற்படாத தன்மையை யடைந்தவர்போன்ற அவரை இமைகள் கொட்டாமலே கண்களால் பார்த்துக்கொண்டிருக்கிற ஸ்திரீகள், ஒருவருக்கொருவர் இவ்விதம் கூறலானுர்கள்—தாமரை மலர் போன்ற முகம் ஆச்சரியமாயுள்ளது. இரு நேத்திரங்களும் ஆச்ச ரியமானவை, இரு கைகளும் வியப்பைத்தாக்கூடியவை. மார்போ ஆச்சரியமாயுள்ளது. இவருடைய பார்வைகளில் மிகுந்த ஸாமர்த் தியம் விளங்குகிறது. ஆச்சரியம். மதயானையில் இவர் ஏறியிருப் பது விசித்திரமாயும் ஆச்சர்யமாயுமுள்ளது—என்று.

இவ்விதம் வீதிகள்தோறும் சொல்லப்படுகின்ற பெண்களின் பேச்சுகளைக் கேட்டுக்கொண்டு, புன்சிரிப்புக்கொண்டவரான சிவபெருமான், பட்டணத்து ஸ்திரீகளால் வழியில் முத்துக்கள்

போன்ற பொறிகளால் இறைக்கப்பட்டவராய்ச் சென்றுகொண்டிருந்தார். அவர் அரண்மனைவாயிலின் சமீபத்தில் யானையை அடக்கி நிறுத்தி, 'தேவஸ்திரீகளோடுகூட லக்ஷ்மிதேவியையும், ஸரஸ்வதி தேவியையும் அரண்மனையில் பிரவேசிக்கும்படிசெய்" என்று நந்திக்குக் கட்டளையிட்டார். பிறகு நந்தியால் காண்பிக்கப்பட்ட வழியாக தேவஸ்திரீகளுடன் அரண்மனையில் அவர்கள் பிரவேசித்தனர்.

உபாத்தியாயரான அகத்தியரால், தங்களுக்குரிய பூஜைபால் முன்னிடப்பட்ட அவ்விருவர்களையும், விரைவாக ஓடி காஞ்சனமாலிகை வணங்கினள். அக்காஞ்சனமாலை, இந்திராணி லக்ஷ்மி ஸரஸ்வதி இவர்களால் தழுவிக்கொண்டாடப்பட்டவாளாய், லக்ஷ்மிக்கு தாமரைப் பூவையும் ஸரஸ்வதிக்குக் கிளியையும் இந்திராணிக்கு இரத்தினத்தையும் கொடுத்தாள். பாட்டியே கிட்டவா; அந்த நாட்டுப்பெண் எங்கே? எங்களது தாயைக்காண்பி' என்று சொல்லப்பட்ட காஞ்சனமாலிகை, அவர்களை தடாதகையின் இல்லத்தைச் சேர்ப்பித்தாள். அங்கு தேவஸ்திரீகள் விவாஹத்திற்குரிய அழகான வேஷங்கொண்ட வதுவைப்பார்த்து, அசையாமல் நின்றனர். புதிது புதிதாக வளர்கின்ற இவளுடைய முகத்தின் வனப்பைக்கண்டு, விளையாடுகின்ற மீன்கள்போல் அசைகின்ற அவளது கண்கள் சோபித்தன. லக்ஷ்மிதேவியானவள் பரமசிவனுடைய சிருங்கார ரஸத்திற்கு தெய்வமான அப்பெண்ணைக்கண்டு வெட்கித்தாள். பிறகு நகைகளின் கனத்தால் மெதுவாகத்தோழிமார்களால் பிடித்துக்கொள்ளப்பட்ட ஹாரமண்டலத்தையுடைய அப்பெண் ஸரஸ்வதியையும் லக்ஷ்மிதேவியையும் வணங்கினள். வானவப்பெண்களோடுகூட இந்திராணியைத் தழுவிக்கொண்டாள்.

மதுராப்பிரவேசம் என்னும் ஆறுவது அலை முற்றிற்று.

---

## ஏழாவது தரங்கம்.

பிறகு சிவபெருமான் யானையிலிருந்து இறங்கி, பார்ஷதர்களும், வானவர்களும் பின் தொடர அரண்மனையில் நுழைந்தார்; அகத்தியர், அந்த வரனை உசிதமான பூஜையால் கௌரவப்படுத்தி பிரவேசிக்கச்செய்தார். பாண்டியராஜனின் அந்தப்புரத்து ஸ்திரீ

களால், கைகளிலுள்ள பொறிகளால் இறைக்கப்படுகின்ற அந்த வரனைப் பார்க்குமிடத்து சடையை அடித்ததால் பெருகின கங்காதேவியின் நீர்த்துளிகளால் வியாபித்தவர்போல் தோன்றிற்று. உள்ளே நுழைந்த மாப்பிள்ளையை எதிர்பார்த்து, காஞ்சனமாலையால் அனுப்பப்பட்ட லக்ஷ்மிதேவியானவள் பாலால் இவரது அடிகளில் பாத்தியம் கொடுத்தாள். இந்திராணியோடுகூடின ஸரஸ்வதிதேவி, கையில் தீபமெடுத்து, வலஞ்சுற்றிவந்து, சந்திரமௌளியைப் பிரவேசிக்கச்செய்தாள். பிறகு கங்காதரன், நான்கு பவழத்தம்பங்களால் சோபிக்கின்றதும், விசித்திரமான வைதூர்ய கற்களாலாக்கப்பட்ட கொடுங்கைகளுள்ளதும், தொங்குகின்ற முத்துமாலை ஸரங்களால் அழகுவாய்ந்ததுமான கல்லியாண மேடையில் பிரவேசிக்கலானார்.

அப்போது ஆனந்தமான பேரிவாத்தியத்தின் பாங்காரத்வனிகளால் நிறைந்தும், அந்தப்புரத்து சுந்தரிகளின் புயங்களால்அடிக்கப்பட்ட தூர்யவாத்தியங்களின் (மிருதங்கம் முதலான) ஒலிகளால் ஏற்பட்ட சமத்காரமுள்ள ஸங்கீதத்தால் அழகுவாய்ந்ததும் மாப்பிள்ளையைக் கொண்டாடுகின்ற பெண்ணைச்சார்ந்த பந்துக்களின் சந்தோஷாரவாரமுள்ளதும் முனிவர்களால் கூறப்பட்ட மங்களவாக்கிய பாடங்களோடு கூடினதுமாயிற்று. பிறகு முனிவர்கள் ஆஸனத்தில் அமர்ந்த ஆதியுவாவான சங்கரனை, ஆசிவார்த்தைகளால் போஷித்தனர். புஷ்பங்களை இறைத்துவணங்கும் மலயத்வஜனுடைய பட்ட மஹிஷியான காஞ்சனமாலையை லக்ஷ்மியும் கலைமகளும் சொல்லத்தெரிந்துகொண்டு மாமியாரை ஆனந்தமாகப் பார்த்தார். பிறகு ஸ்ரீதேவியும் ஸரஸ்வதிதேவியும் லஜ்ஜையால்தலை குனிந்த நாட்டுப்பெண்ணை, வரனுடைய பாதி ஆஸனத்தில் அமரச்செய்தனர்.

ஸகோதரியைக் கொடுப்பதற்கு, கமலாஸனனால் தூண்டப்பட்ட பெருமாள், ஸ்ரீதேவியோடுகூட, காஞ்சனமாலிகைக்கு முன்பு, நாட்டுப்பெண்ணின் (வதூ) அருகில் உட்கார்ந்தார். பிறகு சிவபெருமான் விவாஹஹோமத்தில் அகத்தியரை பிரம்மனாகவும், பிரமனை அத்வர்யுவாகவும் (உபாத்தியாயராகவும்) வரித்தார். பிறகு அரிதேவன் (விஷ்ணு) ஸ்ரீதேவியின் கையால் விடப்பட்ட பாத்தியத்தால் பரிசுத்தமான சம்புவின் பாதகமலத்தைப் புஷ்பங்களால் அர்ச்சித்தார். பிறகும் அவனை மடியில் வைத்துக்

கொண்ட செந்தாமரைக் கண்ணன், ராஜ்யஸம்பத்தாகிற தக்ஷிணை யோடுகூட, வரனுக்குத் தானம் செய்தார். அந்த தம்பதிகள் மாலைமாற்றுவது முதலான மங்கள காரியங்களைச் செய்தனர். ஹோமவிதியில் தனது அஞ்சலியால், மீனாக்ஷியின் லாஜாஞ்சலியை (பொறியை) வரன் வாங்கிக்கொண்டார். அம்மிக்குழவியில் ஏற்று வதற்கு மீனாக்ஷியின் சரணத்தை வரன் பிடித்துக்கொண்டார். உலகத்திற்கே மங்களநிதியான அந்ததம்பதி (மீனாக்ஷியும் சிவனும் அக்நிபகவானை வலம்சுற்றினார்கள்.

பிறகு பிரம்மதேவர் விவாஹ கர்மாவைப் பூர்ணமாக நடத்தி, இரத்தினங்கள் பதிப்பிக்கப்பெற்ற பீடத்தில், இடது புறத்தில் வதூவையும், வலது புறத்தில் வரனையும் இருக்கச் செய்தார். அங்கு பிரமன் முதலான முனிவர்கள், ஆசிகளால் இவர்களை விருத்திசெய்தனர். பிறகு அந்த சிவபெருமான் தக்ஷிணைகளால் வேதியர்களை சந்தோஷப்படுத்தியும், தக்க மரியா தைகளால் வானவர்களை ஸம்மானித்தும், பின்பு சிரமபரிஹாரத் திற்காக தடாதகையின் அந்தப்புரத்தில் நுழைந்தார். கலைமகளா லும் ரமா தேவியாலும் அறிவிக்கப்பட்டு, அம்பாளின் கையைப் பிடித்துக்கொண்டு, பரமசிவன், விலைமதிக்கப்பெறாத மஞ்சத் தில் அமர்ந்தார். அப்போது காந்தனான சுந்தரேசர், முகம் குனிந்து நிற்கின்ற புதிய கலியாணப் பெண்ணான மீனாக்ஷியை, முன்பு ஸங்கேதம் செய்விக்கப்பட்ட தோழிமார்களால் கோப மூட்டிப் பேசும்படிசெய்து கொண்டார்.

இச்சந்தர்ப்பத்தில் நடராஜனின் தாண்டவத்தைக் காணு மல் ஒருக்காலும் நீருமருந்தாதவர்களான பதஞ்சலி வியாக்கிர பாத முனிவர்கள் சுந்தரேசுவர விவாஹத்திற்கு மதுரைவந்திருந்த படியால், பொன்னம்பலத்திற்கு போகமுடியவில்லை. சுந்தரபாண் டியதேவனான சங்கரன் அவர்களின் உறுதியைக்கேட்டு அவர் களை அழைத்து இவ்விதம் சொல்லலானர்—“சபாபதி பொன்னம் பலத்தில் ஆடுவதுபோல் இந்த வெள்ளியம்பலத்தில் ஹாலாஸ்ய நாதரும் எப்போதும் தாண்டவம் புரிகின்றார்” இங்கேயே சந்திர மௌளியின் ஆச்சர்யமான அந்த மாத்யாஹ்னிக நடுப்பகலி லுள்ள நடனத்தைக்கண்டு களித்தபின்பு (பிராணாக்நி ஹோத் திரம்) புசிப்பதால் அநுக்கிரஹிப்பதற்கு இங்கு விரைவாக வாருங்

கள்—என்று. இவ்விதம் சொல்லப்பட்ட அந்த பாசுபதர்களான முனிவர்களிருவரும், அப்படியே என்று, பொற்றாமரைசென்று, நியமாபிஷேகத்தைமுடித்து சுந்தர நாதனின் நர்த்தன சாலையை அடைந்தார்.

அங்கு அரன் அப்போது, பிரம்ம கபால ஜாலங்களை மறைத்து, சந்திரகலையை வெளிக்காட்டி சடையை முடித்து சபையில் இறங்கினார். அப்போது முராரி முரஜத்தை (மிருதங்கத்தை) அடித்தார். பிரமதேவர், தாளம்போட்டார். அப்போது பரம சிவன், ஆதோத்திய கீதங்களையனுஸரித்து பாததாளத்தைச் செய்துகொண்டும் அபிநயாஸங்களை துரிதமாகப்பிரகாசப்படுத்திக் கொண்டும், ஆவர்த்தனத்தின் வேகாதிசயத்தால் சிதறின அங்கஹாரத்தையுடையவராய்க் கொண்டும் லலிதமான தாண்டவமாடினார்.

அப்போது ஸகல உலகமும் மயிர்க்கூச்சலிட்டு ஆச்சர்யத்தால் மயங்கி ஒரே மனோவியாபாரத்துடன் சித்திரத்தில் எழுதப்பட்ட பதுமைபோலிருந்தது. அம்முனிபுங்கவர்களை, நர்த்தனத்தின் முடிவில் மனதைக்கவர்கின்ற சந்திரசூடாமணியின் ஆனந்த சரீரத்தை தியானித்து "நாதனே! எங்களுக்காகமெதுவான திருவடிகள் இவ்விதம் ஆயாஸப்படுத்தப்பட்டதை மன்னிக்கவேண்டும். உமது அனுக்கிரஹத்தால் பயன்பெற்ற நாங்களிருவரும் லோக க்ஷேமத்திற்காக இத்தாண்டவம் மதுரைமா நகரில் எப்போதும் நிலையாக இருக்கவேண்டும்" என வேண்டுகிறோம். என்று துதித்தனர். ஸ்ரீ சுந்தரேசக்கடவுளும் அவர்களின் அபிமதப்படி, வெள்ளியம்பலத்தில் தாண்டவத்தைப் புரிவதற்கு அறிகுறியாக, திவ்விய மூர்த்தியுடன் இருந்து யாவருக்கும் கிடைக்க அறிதான சிவஞ்ஞானத்தையும் அளித்து, அவர்களை அனுக்கிரஹித்தார்.

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேச்வர விவாஹம் என்ற ஏழாவது தரங்கம் முற்றிற்று.

## எட்டாவது தரங்கம்.

பிறகு அகத்தியமாமுனிவர் புராரியின்சேவையான முடிவில் வந்தவர்களும், ; பாத்தியம்பெற்றுக்கொண்டவர்களுமான அந்த

ணர்களையும்; வானவர்களையும், ஸுவர்ண பீடங்களில் போஜனம் செய்வதற்கு அமர்த்தினார். கற்பூரப் பரிமளம்சேர்ந்த சந்தனக் குழம்பால் பூசப்பெற்றும், தக்ஷிணையாலும் பூமாலைகளாலும் அர்ச்சிக்கப்பட்டவர்களான அவர்கள் சுவைபொருந்தின அன்னங்களை புஜித்தனர். அவர்கள் கறிகாய்கள், அன்னம், ஊறுகாய், பருப்பு, குழம்பு, ரஸம், பாயசம் முதலிய வகுப்புகளாலும் நெய், சர்க்கரை, தேன் முதலியவைகளாலும், எண்ணிக்கை மதிக்கப்பெறாத விசித்திரமான பக்ஷ்யங்களாலும் கனிகளாலும் திருப்தி அடைந்தனர். அமிழ்தத்தைப் புசிக்கும் தேவர்கள் விசித்திரங்களான பக்ஷ்யங்களாலும், போஜ்யங்களாலும், ஆச்சரியப்பட்டு, பிரம்மனால் வஞ்சனைசெய்து தேவர்களாக்கப்பட்டோம் என்று தங்கள் ஜாதியை நிந்தித்தனர். தவத்தின் பயனையுள்ள தேவத்தன்மையில் அவர்களால் கூறப்பட்ட வசைமொழியைச் செவியுற்று காற்றையும் நீரையும் சருகுகளையும் புசிக்கும் முனிவர்களும் தங்களுடைய மௌன விரதங்களை நழுவவிட்டனர்.

சுந்தரக்கடவுள் நித்திய கன்மாக்களை முடித்துவிட்டு, இவ்விதம் யாவரும் போஜனத்தால் சந்தோஷப்பட்டதைக் கேள்வியுற்று, வதுவுடன் போஜனமேடையில் உட்கார்ந்தார். பிறகு முன்னால் கலைமகளுடன் விரிஞ்சனும், ஸ்ரீதேவியுடன் முகுந்தனும், இந்திராணியோடு புரந்தரனும், பக்கத்தில் கணபதி, முருகன், நந்திதேவர் இவர்களும் உட்கார்ந்தனர். பிறகு மஹாதேவர் அருகிலுள்ள அவர்களை வேடிக்கைச் சொற்களால் களிப்புறச்செய்துகொண்டு, அன்னபூர்ணியால் பாமாறப்படுகின்ற பல விதமான சுவைபொருந்தின பரிசுத்தமான அன்னத்தை, வதுவுடன்கூடப் புசித்தார். அச்சுந்தரக்கடவுள், தான்சாப்பிட்டு மீதியான அன்னத்தின் ஒரு கபளத்தை, மந்திரத்துடன் மனையாளுக்கு அளித்தார். பிறகு புசித்து எழுந்த சுந்தரபாண்டியதேவர், களைப்பாறுவதற்காக தோழர்களை அனுப்பிவிட்டு, தடாதகையின் பள்ளியறையை அடைந்தார்.

பிறகு பாகசாலையில் ஏவப்பட்ட ஜனங்கள், காஞ்சனமாலையின் முன்பு அன்னராசிகள் ஆயிரக்கணக்காக மிகுந்துபோனதாக அறிவித்தார்கள். அதைச் செவியுற்று அவள் பெண்ணிடம் அறிவித்தாள். அவளும் என்னசெய்யப்படட்டும் என்று,

யிருந்த வெட்கத்துடன் பிரியனிடம் தெரிவித்தாள். அப்போது அவர் அவளைப்பார்த்துப் பகர்ந்ததாவது—தேவியே; நீ மூவுலகங்களுக்கும் ராணியாய் இருக்கிறாய். ஆகையால் உனது ஏராளமான அன்னத்தைப் புசிப்பதற்கு என்னிடத்தில் எவர்கள் இருக்கப்போகின்றனர்? ஆனாலும் குண்டோதரன் என்ற ஒரு கணம் எனக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்ததால் மீதியாயிருக்கிறான். அவனுக்கு முன்னால் சாப்பிட அவகாசமேற்படவில்லை. தனது வயிற்றை நிரப்புகின்ற இவனை போஜனம் செய்யும்படி செய்—என்று.

இவ்வாறு சொல்லிவிட்டு, ராஜகுமாரியின் அன்னகர்வத்தின் மேன்மையை நீக்கக்கருதினவராய் அவனுக்குக்கட்டளையிட்டார். அப்போது வைச்வானரரூபியான அக்னிதேவர் கணத்தின் வயிற்றில் நுழைந்தார். பிறகு அந்த அவளால் ஏவப்பட்ட சமயற்காரர்கள் போஜனசாலைக்குள் அவனை பிரவேசிக்கச்செய்து விசாலமான பாத்திரங்களைப்பரத்தி பக்ஷ்யபோஜ்யங்களை வர்ஷித்தனர். அவர்கள் சாப்பிடு என்று சொல்லியபோது பிராணாஹுதிக்கே போதுமான அன்னத்தை இங்கு நான் காணவில்லையே. எங்ஙனம் சாப்பிடத்தொடங்குவேன் என்று குண்டோதரன் கோபத்தோடு கூறினான். அங்கு பாண்டியகுமாரியும் சுமதியும் ஆச்சர்யப்பட்டு மறுபடியும் பக்ஷியஞ்செய்பவர்களைக்கொண்டும் சமயற்காரர்களைக்கொண்டும் அடிக்கடி அன்னராசிகளைக் கொடுக்கச்செய்தனர். அவன் கறிகாய்களோடும் ஊறுகாய்களோடும் கலந்த அன்னக்குவியலையும் பக்குவமானவைகளும் பக்குவமாகாதவைகளுமான போஜ்யங்களையும் பார்த்து, அவைகளால் சிரமப்பட்டு பிராணாஹுதியைச்செய்து தீராப்பசியால் வாட்டமடைந்து சமயலறையில் நுழைந்தான்.

அங்கு அவன், அன்ன ஸமூகத்தை பாத்திரங்களோடும், பாலை பாண்டங்களோடும், நெய்யை பிதிலியோடும் கூடவே உட்கொள்ளும்போது, இவனைக்கண்டு அச்சமுற்ற சமயற்காரர்கள், ஓடத்தலைப்பட்டனர். அங்கு ராஜகுமாரியால் வேண்டிக்கொள்ளப்பட்ட கற்பக தருக்களும், தேவலோகத்துப்பசுவும், எந்த எந்த பதார்த்தங்களை சிருஷ்டித்தனவோ, அவையாவும் அவனுக்கு ஊறுகாய் ஸ்தானமாக ஆயின. பிறகும் அவன். கோதுமை முதலான தான்யங்களை, குட்யங்களோடும், குதிர்களோடும், பெரும்

பாத்திரங்களோடும், குடங்களோடும் கூடவே புசிக்கலானான். பிறகு அவ்வனது சேஷ்டையைக் கேட்டு ஓடிவருகின்ற தேவியைக் கடைக்கண்ணிட்டுப்பார்த்துக்கொண்டு, சுந்தரக்கடவுள் புன்சிரிப்போடு இருந்தார்., பிறகு மீனாக்ஷியாலாக்கப்பட்ட அக்ஷயமான அன்னக்குழியிலுள்ள அன்னத்தையும் இவன் நான்கு கபளங்களாலேயே எடுத்துப்புசித்து, தரையைமாத்திரம் மீதியாக்கினான்.

அன்னத்தால் நிறம்பாத எனது வயிறை ஜலத்தாலாவது நிறப்புகிறேன் என்று அவன் நீரை யாசித்தபோது பாண்டிய குமாரி கங்கையை நினைத்தாள். பிறகு மலயமலையிலிருந்து பெருகுகின்ற ஆகாயகங்கை அலைகளால் பூமியை முழுகச்செய்கின்றவள் போல மதுரைமாநகரின் ஸமீபத்திற்கு அணுகினாள். அப்போது அவன் வாயில் கையை வைத்து அவ்வாகாசகங்கையையும் அருந்தினான். மறுபடியும் அவனுடைய களைப்பைக்கண்ட மீனாக்ஷிதேவி வெட்கத்துடன் கைலாஸநாதனைப்பார்த்துக் கூறினாள். கௌரவத்தைத்தரும் காந்தனே! உமது மகிமையையறியாமல் முன்பு அன்னம் மீந்துவிட்டது என்று யாதொரு வார்த்தையைக் கூறினேனே அதை மன்னித்து இவனது தாஹத்தை முழுவதும் நீக்கியருள்புரியவேண்டும்—என்று.

பிறகு சுந்தரபாண்டியதேவர் தேவியே! எதாவது ஒரு வியாஜத்தால் உனது வார்த்தையைக்கேட்கக்கருதியே நான் இவ்வாறு செய்தேன். அவனுடைய தாஹத்தைப் போக்கிவிட்டேன். இந்த ஆகாயகங்கை 'பூர்ணப்பிரவாஹமாய்ப் பெருகட்டும் வேகத்தோடு இந்நதி பெருகினதால் வேகவதி (வைகை) என்று பிரசித்திப்படட்டும் என்று இனிய சொல்லால் சமாதானப்படுத்தி அவளோடு ரமித்தார்.

அதன்பிறகு மறுநாளில் அவர்ஸகலதேவர்களாலும் அகத்தியர் முதலான மாமுனிவர்களாலும் பாண்டியராஜ்யத்தால் அபிஷேகஞ் செய்யப்பெற்று, அந்த மீனாக்ஷிதேவியோடுகூட பூமியையாண்டார். இவ்விதம் சுந்தரேசக்கடவுள், ஸகல ஸம்பத்துக்களும் நிறைந்த ஸகலராஜ்யங்களையும்பெற்று தக்க உபசாரங்களால் தேவர் முதலானோரை யனுப்பிவிட்டு, ஆழி சூழ்ந்த இந்த மேதினிஸ்ய யநுபவித்தார்.

ஸ்ரீ மீனாக்ஷிபரிணயம் முற்றிற்று.

K. V. சுப்பிரமண்ணிய சாஸ்திரி.

# அகில இந்திய ஸாதுஸங்க மகாஸபை

திருக்கழுக்குன்றம்.

---

இச்சபையின் 29-வது வருஷக் கொண்டாட்டம் 25-12-30ல் திருக்கழுக்குன்றத்தில் இச்சபா ஸ்தாபகரான ஸ்வாமி கருணானந்தரால் அமைக்கப்பட்டிருக்கும் ஆசிரமத்தில் நிகழ்ந்தது. அவ்வமயம் காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஸாது சங்க மஹாசபையின் சார்பாக ஸ்ரீ ஆச்சாரிய சுவாமிகள் அவர்களுக்கு ஒரு உபசார பத்திரம் பிரஹ்மஸ்ரீ அட்வோகேட் எம். கிருஷ்ண சுவாமி அய்யர் அவர்களால் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அது வருமாறு:—ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியாகிய கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் திவ்ய சந்நிதானத்திற்கு, திருக்கழுக்குன்றம் அகில இந்திய சாதுசங்க மகா சபையார் உள் அன்புடன் உவந்து வணங்கி அடியுறைஇடும் வந்தனோபசாரம். இப்பாரத பூமியை ஞானஒளியால் விளங்கச் செய்த ஜகத்குருநாத! முற்காலத்தில் நம்கண்டத்தை அறிவுமயமாய்த் திகழச் செய்வதற்கான பெருங் கைங்கர்யத்தை மேற்கொண்டு ஆன்மாக்களுக்கு இதத்தையே செய்யும் சங்கரே திரு அவதாரமாகி சன்மார்க்கம் தழைக்கச்செய்த சத்குரு மரபில் தோன்றிய அருள் வள்ளலே! நின்வரவு நல்வரவாகுக. ஞானமயமாய் விளங்கும் கிருபாமூர்த்தி! தொன்மைப் பெரும் புகழ் கொண்ட நின் அடிமலர் பதிந்த இத்தலம் மேலும் மேலும் தூயதாய் பக்குவான்மாக்களுக்கு ஏற்றவண்ணம் இனி, ஞானத்தியாகம் செய்யும் வண்மையை மேற்கொள்ளும் என்பதற்கு ஐயுறவு இன்று தனக்கெனக் கூடகோபுரம் கட்டி பிரபஞ்சவலையிற் சிக்கி மாளாது பிறர் நலம் கருதுவதே சிறந்த நலம் எனக்கருதி உடல் பொருள் ஆவி மூன்றையும் பொது நலத்துக்கென அர்ப்பணம் செய்த ஸ்ரீ கருணானந்த சுவாமிகளை ஞாபகம் ஊட்டுகின்றது இம்மனோகரமான மண்டபம். இம்மண்டபம் சுவாமிகள் அரிய திருவடிதீண்டப்பெறுதலின் புனிதமாம் 'என்ன மாதவம்செய்தது இச்சிறுகுடில்' என்ற உண்மையை விளக்குகின்றது, ஆன்ம ஞானம் குன்றி 'அதன் உண்மை இன்னதென்றே விளங்காமல் கண்டன கண்டன கூறித்திரியும் போலிஞானிகள் மலிந்த இக்

காலத்தில் உண்மைத்தத்துவ ஞானத்தை உணர்த்தி எவரையும் நன்னெறிப்படுத்துக் ஒழுக்கத்தில் எழுந்தருளியிருக்கும் ஞான சத்குருவே! நின் மலரடி வணங்குகின்றோம். தமோகுணம் எங்கும் நுழைந்த மனவலி இழந்து நிற்கின்ற இன்றைப்பொழுது அன்பாகிய தருவில் தவமாகிய அருங்கனி ரசமாகிய அத்வைதம் கற்பிக்க எழுந்தருளிய ஞானதருவே, நின்மலரடியை உவந்து வணங்குகிறோம். அன்பைப் பெருக்கி ஆனந்தம் ஊட்டி ஆன்ம சக்திவளரச் செய்வோய்! சரணம், சரணம், நின் பாதபங்கயம் சரணம், சரணம். ஜகத்குரு சங்கரபகவத் பாதரே! சரணம், சரணம்.

திருக்கழுக்குன்ற,
சாதுசங்க மஹா சபையார்.

---

# செய்நன்றி மறவாமை
## (அல்லது குருபக்தி.)

---

(642-வது பக்கத்தொடர்ச்சி.)

அதன் கடைவாயினின்றும் பெருகின அமிர்தம்ராடீஜங்கன் உறுப்புகளில் விழவே அவன் உயிருடனெழுந்திருந்தான். பின் தேவேந்திரன் வந்து ராஜதர்மனுக்கு பிரும்மாவின் சாபத்தினால் இவ்விதம் நேர்ந்தமையும் காலத்தின் வரலாற்றையும் கூறி மறுபடி தேவலோகத்துக்கு வருவாறு அழைத்தான். அப்பொழுது आनृशंस्यं परोधर्मः என்பதை அறிந்த ராடீஜங்கன் ஆச்ரிதவாத்ஸல்யத்தினால் கௌதமனை கைவிடக்கூடாது என்று நினைத்து ஓ தேவேந்திரனே! நீர் எனக்குப் பிரஸன்னமானது உண்மையானால் இந்த துவிஜனையும் அமுதத்தில் நனைத்து உயிர்கொடுத்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டது. அதற்கு இந்திரன் कृतघ्ने नास्ति निष्कृतिः என்றிருப்பதால் இவன் இப்பொழுது பிழைத்தாலும் அனேக ஆயிரம் வருஷங்கள் நரகங்களில்கிடந்து துன்புற்றுப் பிறகு பல துஷ்டமிருகஜன்மங்களை அடையவேண்டியவன், ஆயினும் இப்பொழுது ஜீவிக்கும்படி செய்தேன் என்று பிழைக்க வைத்தான். ராடீஜங்கன் கௌதமனை ஆலிங்கனம் செய்து கொண்டு நண்பரே! உமது பணமுடிப்புடன் ஜாக்கிரதையாய் ஊர் போய்ச்சேரும் என்று விடை கொடுத்தனுப்பிவிட்டு தான் தேவலோகம் சென்றது. இந்த உபாக்யானத்தினால்

कृतमपि महोपकारं पयइवपीत्वा निरातङ्कम् ।

என்று எவ்வளவு மஹோபகாரம் செய்தபோதிலும்மறந்து அபகாரமே செய்வது துஷ்டர்களின் சுபாவம். பாலைப் பருகிவிட்டு விஷத்தைத்தக்கொடுக்கும் பாம்பின் குணம்போன்றது என்றும்

नस्मरत्यपकाराणां शतमप्यात्मवत्तया

என்று அளவற்ற குற்றங்கள் செய்தகொண்டிருந்தபோதிலும் பொறுப்பது பெரியோர் சுபாவம். यदि वा रावणः स्वयम् என்று தாராபஹாரியான ராவணனையும் ரட்சிப்பேன் என்று பிரதிக்ஞைசெய்து அவன் தம்பியை ரட்சித்தவரும், பாரியாளுக்கு அபகாரம்செய்த காகாஸுரனை

त्रींल्लोकान् संपरिक्रम्य तमेव शरणंगतः ।

என்று சரணாகதிசெய்து காகத்தை ரட்சித்தவருமான ஸ்ரீராமபிரான் சரிதம்போன்றது என்றும் விளங்குகிறது. இவ்விதம் ஏதோ ஒரு விஷயத்தில் ஒருசமயத்தில் ஒருபிரகாரமாக உபகரித்தவரையே மறக்கக்கூடாதென்றால் கைம்மாறு புரியமுடியாததாயும் கரையில்லாததுமான பலவித உபகாரம் புரிந்தவர்களைக்கனவிலும் மறத்தல் தகுமோ? ஒருக்காலும் தகவே தகாது. அவர்கள் யாவர் என்பதைச் சற்று விவரிப்போம். முதலில் நமது தாய், அவள் நம்மைப்பெறவேண்டி அநேக தவம புரிந்தனள். பிறகு सा भावयित्री என்றபடி கர்ப்பத்துக்கு ஹிதமான ஆகாராதிகளைக் கொடுத்துப்போஷித்தாள். பிரஸவக்லேசமோசொல்லிமுடியாது. பெற்றபின் வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும் வைத்தாதரித்தாள். தன் சுகம் கவனியாது குழந்தையின் சுகத்தையே நாடிநின்றாள். இன்னும் தான் ஸ்வஸ்தமாயுள்ள காலத்தும் குழந்தைக்கு மாந்தம் பிணி ஏற்படுமானால் சேயுண் மருந்து தின்று தானுண்ணுநின்று கவலையுடன் காப்பாற்றினாள். இதுபற்றியே मातेव रक्षति என்று ரக்ஷணம் அன்னையின் அஸாதாரணதர்மமென வழங்குகிறது. அன்னையை மறந்தோர் செய்நன்றி கோன்றாரே. இரண்டாவது நமது தந்தை. அவரும் அனேக தர்மங்களுக்கு ஸாதனமாயும் பிரும்மவித்தியாந்தமான சிரேயஸ்ஸாதனத்தைச் சம்பாதிக்கும் திறமை வாய்ந்ததுமான சரீரத்தையளித்ததுமன்னியில் ஜாதகர்மம்முதலான ஸம்ஸ்காரங்களை காலத்தில் செய்து மனதைச் சுத்தப்படுத்திவைத்திருக்கிறார்.

பாலியத்தில் விளையாட்டில் கருத்தாய் அலையாமல் இருக்கும்படி தடுத்து தர்மானுஷ்டானத்திலும் வித்தியாப்பியாஸத்திலும் பிரவிருத்தி வரும்படிசெய்து ஹிதத்தில் புகுத்தினர். ஆனதுபற்றியே पितैवहितेनियुङ्क्ते என்று உதாஹரிக்கப்படுகிறதென்பதை அறியாதார் யார் ? இவரை மறந்தோர் செய்நன்றிகொன்றோரென்பதில் ஐயமுண்டோ, இதைப்போலவே ज्येष्ठभ्रातापितृसमः என்றுதமயன் தம்பிகளுக்கு நற்புத்தி கற்பிக்கிறான். தகப்பனில்லாத மைனர்களை கைதூக்கிவிடுகிறான். பிறகு அவர்கள் அவரை எதிர்க்கின்றனர். அந்தோ இது கொடிதினும் கொடிது. செய்நன்றி கொல்லலாமா? மூன்றாவது இப்பொழுது நாம் தலையங்கமிட்டுக் கொண்ட குருபக்திக்கு ஆலம்பனமான குரு. இவர்தான் நமக்கு ஞானக்கண்ணைத் திறந்து அஜ்ஞானஇருள் நீங்கும்படி செய்து உபகரித்த உயர்ந்தவர், सहि विद्यातस्तं जनयति என்று வித்யாப்ரயுக்த ஜன்மமளித்தவர்

अनेकसंशयोच्छेदि परोक्षार्थस्यदर्शनम् ।
सर्वस्यलोचनं शास्त्रं यस्यनास्त्यन्धएवसः ॥

என்று சாஸ்திரக்கண்ணில்லாதவன் பிறவிக்குருடனேயாவான். காளிதாஸனும்

कामं कर्णान्तविश्रान्ते विशालेतस्य लोचने ।
चक्षुष्मत्ता तु शास्त्रेण सूक्ष्मकार्यार्थदर्शिना ॥

என்று ஸ்தூலவஸ்துக்களைமாத்திரம் பார்க்கும் சக்தியுடையதும் அதிலும் ஒன்றை மற்றொன்றாக அறியும் தோஷமுள்ளதுமான சர்மசக்ஷுஸ் உபயோகமற்றது. அதிஸூக்ஷ்மமான தர்மஸ்வரூபத்தையும் பிரும்மஸ்வரூபத்தையும் காட்டக்கூடியதும், நிர்தோஷமுமான சாஸ்திரமே கண்ணென்றார். அவ்விதமான சாஸ்திரக் கண்ணை நமக்கு தந்தருளியவர் நமது குரு. அவரை எக்காலத்தும் இடைவிடாது சிந்திக்கவேண்டுமென்றும், சிந்தியாது விட்டவர்களேதான் செய்நன்றி கொன்றமக்கள் என்பதற்கும் வேறு பிரமாணம் உபன்னியஸிக்கவேண்டிய அவசியமில்லை. இதிலும் நமக்குத்தெரியாத சாஸ்திரார்த்தங்களை நமக்கு உபதேசிப்பவர் குரு என்பதாக சாமான்யமாகக் கிடைக்கும். ‘எழுத்தறிவித்தவனிறைவனாகும்’ என்றும் கூறுவார்கள். எழுத்தென்றால் வியாகரணம், சந்திரனைச் சாணளவுதான் என்று நினைக்கிறோம். அதின் உண்மையான பரிமாணத்தை உரைக்கும் சாஸ்திரத்தை உபதேசிப்பவரும் குருவே.

उपनीय नु यश्शिष्यं वेदमध्यापयेत् द्विजः ।
सकल्पं सरहस्यञ्चतमाचार्यं प्रचक्षते ॥

என்பதாக பூணூல் போட்டு வேதமோதுவித்தவனும் குருவே ஆயினும்

गु शब्दस्त्वन्धकारः स्याद्रुशब्दस्तन्निरोधकः ।
अन्धकारनिरोधित्वात् गुरुरित्यभिधीयते ॥

என்றபடி எவரொருவர் அனாதியான அஜ்ஞானபாசத்தால் கட்டுண்டு புத்திரபாரியாதிலக்ஷணமான கௌணஆத்மாக்களிடத்திலும் தேஹேந்திரியாதிகளான மித்தியாத்மாக்களிடத்திலும் அஹம் புத்தியைவைத்துக் கஷ்டப்படும் ஜீவனைப்பார்த்து கருணையுடன் நீ ஸம்ஸாரியல்ல. கர்த்திருத்வாதிகள் புத்தி முதலான உபாதியைச் சார்ந்தன என்ற அஸங்க ஜீவஸ்வரூபத்தையும் அவனுக்கு பிரும்மத்துவத்தையும் உபதேசம் செய்து பந்தத்திலிருந்தும் விலக்கிவிடுகிறாரோ! அவரே குரு எந்த ஆசாரியனுடைய உபதேசரூபமான தெப்பம் இல்லாதவரையில் ஸம்ஸாரார்ணவத்தில் மூழ்கி கரையேற வழிதெரியாமல் அவித்தியாகாம கர்மங்களாலான துக்கநீர்பொங்க தீவிரமான சோகம், ஜரை, மரணம் முதலான முதலைகள் மோத பஞ்சேந்திரிய விஷயங்களை சுகமாகநினைப்பதும், உடனே திருஷ்ணை என்ற காற்றடித்து அலைமோதி அழுந்துவதும், ரௌரவம், மகாரௌரவம் முதலான நரகங்களில் கிடந்தழுந்தி ஆ ஆ என்ற கூச்சலுடனும் தத்தளிப்பார்களோ அவரே குரு. பிறகு ஸத்தியம், ருஜுதா தயை அஹிம்ஸா சமம் தமம் சந்தோஷம் முதலான ஆத்மகுணங்களாகிற கட்டமுதுடன் ஞானமாகிற தெப்பத்துடன் குருவாகிய மாலுமி ஸத்ஸங்கம் ஸர்வத்தியாகம் என்ற துறைவழியாக மோக்ஷமாகிற கரையிற்கொண்டு சேர்க்கிறார்.

ஆதலால் அவரே நமக்கு முக்கியமான குரு. ஸம்ஸாரமாகிற காட்டுத் தீக்கிரையாகாமல் ஞானாமிர்தம் வர்ஷித்த உத்தமர், முந்திய இருவருமாவது நம்மிடமிருந்து ஏதாவது ஒருவிதத்தில் கைம்மாறு புரியப்படுவதை எதிர்பார்க்கக்கூடும். மூன்றாவதாகிய குருவோ எந்தவிதமான பிரத்தியுபகாரத்தையும் எதிர்பாராமல் நமது க்ஷேமத்திற்காகவே மிகவும் பாடுபட நிற்கும் பரமர். இவரும் சிஷ்யனது வேண்டுகோளுக்காகவேண்டியதை உபதேசிப்பார். ஒருவராலும் பிரேரிக்கப்படாமல் ஸர்வலோகங்களும் ஸது

பதேசத்தினால் உஜ்ஜீவிக்கும்பொருட்டு மதத்தைப் பரவச்செய்த மதாசார்யாளை மறப்பது மனிதனுக்கு அழகல்ல என்பது சொல்லவும் வேண்டுமோ? இதைப்பற்றி ஸ்ரீமான் நீலகண்ட தீக்ஷிதர் அவர்கள் தம்து சாந்திவிலாஸத்தில் பின்வரும் சுலோகத்தால் விளக்கியிருக்கிறார்கள். அதாவது—

कोनुव्यासः कइव स मनुः कोन्वसौ याज्ञवल्क्यो
यैरुद्घुष्टं हितमसकृदस्मासु पित्रेव पुत्रे ।
पश्यामस्तान्निरवधिकृपासागरांलोकबन्धून्
पश्यामोऽस्मान्निरवधितमः क्ष्माधरान् ब्रह्मबन्धून् ॥

என்ற சுலோகத்தினால் மனுவுக்கோ வியாஸருக்கோ யாக்ஞவல்க்யருக்கோ நம்மிடமிருந்தடைக்கூடிய பிரயோஜனம் என்ன இருக்கிறது. அவர்கள் அவாப்தஸமஸ்த காமர்கள். யோகமகிமையினால் அர்த்திகளுக்கு ஸர்வாபீஷ்டத்தையும் வர்ஷிக்கக்கூடியவர்கள். பரத்துவாஜர் பரதனுக்குச்செய்த விருந்தையும் வஸிஷ்டர் கௌசிகருக்குச் செய்த அதிதி ஸத்காரத்தையும் நினைத்தாலே தெரியவரும். அப்படி ஸர்வைச்வர்ய ஸம்பன்னர்களாய் இருந்தும் அடிக்கடி தர்மங்களைப் புநருக்திதோஷத்தையும் கவனியாமல் போதித்துகொண்டே வந்திருக்கிறார்கள். லாபம், பூசை, கியாதி, இவைகள் இவர்களுக்கு அபேக்ஷிதமா? தகப்பனார் புத்திரனுக்குப் புத்திசொல்லப் புகுந்தவிடத்தில் புனருக்தி தோஷம் பராமர்சிக்தற்பாலதன்றென்று 'கூறியது கூறல் மாறுகொளக்கூறல்' என்று குற்றங்கணக்கிட்ட நன்னூலாரும் மற்றோரிடத்தில் விலக்கியிருக்கிறார்; விளையாடாதே வாசி; வீணாகவிளையாடாதே; சரியாய்படி என்று அடிக்கடி அன்னையும் பிதாவும் அறிவுறுத்துவதை யாம் கவனித்திருக்கிறோம். கீதையிலும் பகவான் नैनं छिन्दन्ति शस्त्राणि என்று கூறிவிட்டு திரும்பவும் अच्छेद्योऽयमदाह्योऽयम् என்று பன்முறை கூறுகிறார். ஸ்ரீமத் ஆசார்யபகவத்பாதாளும்,

नैषामर्थतः शब्दतो वा पौनरुक्त्यं शङ्क्यं दुरवगमोऽर्थः यथा
बुद्धिमारोहेदिति मातेवाह श्रुतिर्गीता च

என்று உரை செய்திருக்கிறார்கள். அதனால் அத்தகைய ஆசார்ய பாதாளிடத்தில் நன்றிமறவாமல் நன்றி பாராட்டி பக்தித் தியானாதிகளால் மேலான சிரேயஸ்ஸை யாவருமடைவார்களாக.

ரங்கஸ்வாமி சாஸ்திரி.

ஆர்யதர்மம் 15வது ஆண்டு
நிறைவேறியது



ஸ்ரீ ஆதிசங்கா பகவத்பாதாள்.